பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 07 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தின் மூன்று ரயில் நிலையங்கள் உட்பட நாடு முழுவதும் மறுசீரமைக்கப்பட்ட 75 ரயில் நிலையங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் இன்று திறந்து வைக்கிறார்.
- மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக தமிழகத்தில், மக்கள் தங்களது விவரங்களை தாங்களாகவே இணையவழியாகப் பதிவு செய்யும் நடைமுறை இன்று தொடங்குகிறது.
- சென்னையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய காலத்தில் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா அறிவுறுத்தியுள்ளார்.
- மாணவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறக்க தவெக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் நான்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று வெப்பம் இயல்பைவிட அதிகரித்துக் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் மறுசீரமைக்கப்பட்ட 75 ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் இன்று திறந்து வைக்கிறார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ள இந்த ரயில் நிலையங்களை பஞ்சாபின் ஜலந்தரில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார்.

*தமிழகத்தின் சென்னை பூங்கா, சின்ன சேலம் மற்றும் குன்னூர் ரயில் நிலையங்கள் இன்று மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படுகிறது.*

*புறநகர் மின்சார ரயில்களுக்கான முக்கிய நிலையமாக உள்ள பூங்கா ரயில் நிலையம் 14 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்த ரயில் நிலையத்தில் நடைமேடைகள் மற்றும் காத்திருப்பு பகுதிகள் மேம்படுத்தப்பட்டு மின்தூக்கி வசதிகள் செய்யப்பட்டள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.*

*கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலம் ரயில் நிலையம், 15 கோடி ரூபாய் மதிப்பில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*17 07 2026 6 45 PM - Inauguration-2*

*குன்னூர் ரயில் நிலையம் 12 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*<<<<>>>>*

*மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக தமிழகத்தில், மக்கள் தங்களது விவரங்களை தாங்களாகவே இணையவழியாகப் பதிவு செய்யும் நடைமுறை இன்று தொடங்குகிறது.*

*இதுதொடர்பாக எமது செய்தியாளரிடம் பேசிய தமிழக மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் திரு. சுந்தரேஷ் பாபு வரும் 31ஆம் தேதி வரை இது நடைமுறையில் இருக்கும் என்றார்.*

ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் 30ஆம் தேதி வரை வீடு வீடாக சென்று விவரங்களை சேகரிக்கும் பணி நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பணிகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் மறுதேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் சுமார் 20 லட்சம் பேர் எழுதிய இந்தத் தேர்வில் சுமார் 11 லட்சத்து 21 ஆயிரம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளதாக தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

neet.nta.nic.in என்ற இணையதளத்தில் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

<<<<>>>>

சென்னையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய காலத்தில் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், சென்னையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் 430 கிலோ மீட்டர் நீளத்தில் மழைநீர் வடிகால்கள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

*ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.*

*<<<<>>>>*

*மாணவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறக்க தவெக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த விஷயத்தில் உச்சநீதிமன்றம் எழுப்பியுள்ள கேள்வியை வரவேற்பதாக கூறியுள்ளார்.*

*இதில் முந்தைய திமுக அரசின் பிடிவாதத்தை தவெக அரசு தொடரக்கூடாது என்றும், தமிழகத்தில் நவோதயா பள்ளிகளை திறக்க மாநில அரசு முன்வர வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*<<<<>>>>*

*நாகர்கோவிலில் விசாரணைக் கைதி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கை சிபிஐ-யிடம் ஒப்படைக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு. தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.*

*திருவாரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆதிதிராவிடர் நலத்துறையை சமூக நீதித்துறை என பெயர் மாற்றம் செய்திருப்பதை மாநில அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*இந்த ஆண்டு நடைபெற வேண்டிய சீருடைப் பணியாளர்களுக்கான தேர்வு, ஓராண்டு தள்ளிவைக்கப்பட்டுள்ள நிலையில், வயது வரம்பில் தளர்வு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் திரு. திருமாவளவன் வலியுறுத்தினார்.*

*<<<<>>>>*

*தமிழகத்தில் ஈரோடு, கரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று வெப்பம் இயல்பைவிட அதிகரித்துக் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய சில இடங்களிலும், வட கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.*

*<<<<>>>>*

*இருவரிச் செய்திகள்*

*நியூசிலாந்தில் நேற்று மாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி 3ஆக பதிவானது.*

*<<<<>>>>*

*ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூறு ஆண்டுகால பணிகள் குறித்த நூலை புதுதில்லியில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று வெளியிடுகிறார்.*

*<<<<>>>>*

மை பாரத் தன்னார்வலர்கள் பங்கேற்கும் இரண்டு நாள் கருத்தரங்கை லக்னோவில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடர்பான தேசிய கருத்தரங்கை மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

மத்திய புவி அறிவியல் துறையின் புதிய செயலாளராக திரு சீனிவாச குமார் தும்மாலா நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் 3 நாட்கள் நடைபெறும் தொழில்துறை வணிக கண்காட்சி அரங்குகளை மாநில அமைச்சர் திரு. தென்னரசு பார்வையிட்டார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

<<<<>>>>

அரியலூர் மாவட்டத்தில் காணாமல்போன 116 மொபைல் ஃபோன்களை மீட்டு அவற்றை உரியவர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செல்வகுமார் வழங்கினார்.

<<<<>>>>

திருவள்ளூரில் இ-சேவை மையங்களில் நிர்வாகிகளுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சுமார் 2 ஆயிரத்து 800 தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது கண்டறியப்பட்டு அவற்றை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் கூறியுள்ளது.

<<<<>>>>

விளையாட்டுச் செய்தி

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் குகேஷ், அர்ஜுன் எரிகைசி ஆகியோர் தங்களது ஆட்டங்களை டிரா செய்தனர்.

<<<<>>>>